**இன்போமேசன் கொமியூனிகேசன் டெக்னொலஜி ஏஜன்சி ஒப் சிறீ லங்கா (பிறைவேட்) லிமிடட் -2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இன்போமேசன் கொமியூனிகேசன் டெக்னொலஜி ஏஜன்சி ஒப் சிறீ லங்கா (பிறைவேட்) லிமிடட் ''கம்பனி'' மற்றும் அதன் துணைக் கம்பனியின் ''தொகுதி'' 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த இலாப நட்ட கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து தொகுதியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் மீது எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளினை முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்னிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல்

வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பார்க்கையில் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயறபட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக இலங்கையின் தேசிய புலமைப் சொத்து அலுவலகத்தினால் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 32,363,150 தொகை அச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தாமையின் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் ஏனைய வருமானக் கணக்கிற்குச் செம்மையாக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக திரண்ட பற்றாக்குறை அத்தொகையால் குறைவடைந்திருந்தது. இலங்கையின் தேசிய புலமைச்சொத்து அலுவலகதினால் மீண்டும் பணத்தை வழங்குமாறு 2022 ஆம் ஆண்டின் போது வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த மீளச் செலுத்த வேண்டிய பணம் 2017 ஏப்ரல் மாதத்திற்கான சம்பளங்களைச் கொடுாப்பனவு செய்வதற்காக பொதுத்திறைசேரியிடமிருந்து பணம் கிடைக்காமையினால் சம்பளங்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டது.<br><br>பணிப்பாளர்கள் சபையின் அறிவுறுத்தலத்களின் அடிப்படையில் தொழில்நுட்ப அமைச்சினூடாக நேரடியாக தேசிய புலமைச் சொத்து பணியகத்திற்குச் சொத்துமாறு திறைசேரியிடம் வேண்டிக்கொள்ளப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 20 ஆம் பந்திக்கு முரணாக காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல்களை கணக்கீடு செய்யும் போது மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 13,909,600 தொகையான பணிக்கொடை காசு அற்ற செம்மையாக்கல்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் மூலதன மானியம் ரூபா 68,151,282 மற்றும் ஏனைய செயற்திட்ட நிதி ரூபா 1,813,000 தொகை நிதி செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட நிதியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்றில் அடையாளங்காணப்பட்டுள்ள செயற்பாட்டு காசுப் பாய்ச்சலுக்கு எந்த தாக்கமும் இல்லாததுடன் சமர்ப்பித்தல் தவறு மாத்திரம் உருவாகியுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கம்பனியின் பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்யும் கொள்கை மாற்றமடைந்ததன் காரணமாக இடம்பெற்ற பணிக்கொடைக்கான குறைந்த ஒதுக்கீடு ரூபா 1,559,540 தொகை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் இலாப நட்ட கணக்கின் ஆரம்ப திரண்ட மீதிக்கு செம்மையாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் விபரமான வருமானக் கூற்றிற்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கீடாகிய ரூபா 11,903,300 தொகையை இலாப நட்ட கணக்கிற்கு செம்மையாக்குவதற்குப் பதிலாக விபரமான வருமான கூற்றிற்கு செம்மையாக்கியதன் காரணமாக மிகை அத்தொகையால் அதிகரித்து நிதிககூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடு முன்னைய காலப்பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட செயற்பாட்டு முறைமையை பயன்படுத்துவதனை விட உண்மையான சட்டரீதியான கடப்பாட்டின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வித்தியாசமானது நிதிக் கூற்றுக்களுடன் உள்ள குறிப்புக்களில் முறைப்படியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டினை கணக்கு வைத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பல்வேறு செயற்திட்டங்களிலிருந்து கம்பனிக்கு கிடைத்த ரூபா 4,986,669 தொகையான திரணட நிதி செயற்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் வருமானமாக கணக்கீடு செய்யப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்த வேண்டிய செயற்திட்ட நிருவாக மீதியாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக அப்பெறுமதியால் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | வெளி செயற்திட்டங்களின் நிருவாக செலவுகளை தீர்த்துவைப்பதற்கு இருந்த காசு மீதியானது பூரணப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக இலாப நட்ட கணக்கில் வருமானமாக அடையாளங்காண்பதற்கு தவறியிருந்தது என ஏற்றுக்கொள்கிறேன். | முடிவடைந்த செயற்திட்டங்களின் மிகுதிப் பணத்தை வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 20 ஆந் திகதியிலிருந்து 24 மாத காலத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் இணைய தளத்தில் 2.0 (LGN 2.0) சேவையை வழங்குவதற்காக இலங்கை | 2023 திசெம்பர் 22 ஆந் திகதி பொறுப்பு உருவாகியிருந்தனால் ஒரே தடவையில் சொத்துதலினை பதிவுசெய்தல் வேண்டும். இதற்கு | ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முற்பெகாணடப்பவுகள் மாத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| | டெலிகொம் பீஎல்சீ கம்பனி உடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2023/2024 காலப்பகுதிக்காக அறவிடப்படுகின்ற ஒரே தடைவையில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 743,113,857 கட்டணத்தில் உள்ளடக்கப்பட்ட 2024 சனவரியிலிருந்து ஏப்ரல் 19 வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 265,372,068 தொகையினை கம்பனி செலுத்தாதிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் பிற்போட்ட செலவாகக் காட்டுவதற்குப் பதிலாக முற்கொடுப்பனவாக காட்டப்பட்டிருந்தது. | மேலதிகமாக 2024 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திர பொறுப்புக்கள் சான்றிதழ் உதவி மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 265,372,068 பெறுமதி 2023 ஆம் ஆண்டிற்கான செலவுகளுக்குரியதல்லாததனால் அது முற்கொடுப்பனவாக பதியப்படுதல் வேண்டும். | முற்கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் ஏற்கனவே செலுத்த வேண்டிய எனினும் செலுரத்தப்படாத செலவுகள் பிற்போட்ட செலவாக பதியப்படுதல் வேண்டும். |
| (இ) | சேவை வழங்குவதற்காக டயலொக் புரோடர்பேன்ட் நெட்வேக் தனியார் கம்பனிக்குச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 19,043,375 இற்காக வழங்கப்பட்ட 2023 திசெம்பர் 31 ஆந் திகதிய பணமாக மாற்றும் கட்டளை அமுல்படுத்தப்பட்டிருந்தும் அப்பெறுமதி வங்கி மீதியிலிருந்தும் செலுத்த வேண்டிய மீதிகளிலிருந்தும் நீக்கியிருத்தல் மற்றும் அக்கம்பனிக்கு 2023 திசெம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 16,399,631 பெறுமதியான காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தும் காசோலைகள் சம்பந்மாக 2024 பெப்ரவரி 28 ஆந் திகதி நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னைய திகதி வரையும் தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததன் காரணமாக கம்பனியின் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் மீதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 35,443,006 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அமைச்சின் செயலாளர் பெப்ரவரி 22 ஆந் திகதி கடிதத்தின் மூலம் உடன்படிக்கையில் கையொப்பமிடும் வரை கொடுப்பவை தாமதிக்குமாறு எங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளல் கடிதம் வழங்கியதோடு தற்பொழுது ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளதனால் டயலொக் கம்பனிக்கு கொடுப்பனவினை விடுவிப்பதற்கு நாங்கள் கருதியதனால் கடன்கொடுத்தோர்கள் மீண்டும் ஸ்தாபிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் திகதி வரை கொடுக்கல் வாங்கல்களை கவனத்திற்கு எடுத்து கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2003 இன் 27 ஆம் இலக்க தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முழுமையாக பொதுத்திறைசேரிக்குச் சொந்தமான ஒரு கம்பனியாக 2003 மே மாதம் 12 ஆந் திகதி இன்போமேசன் கொமியுனிகேசன் டெக்னொலோஜி ஏஜன்சி ஒப் (பிரைவேட்) லிமிடட் கம்பனி தோற்றுவிக்கப்பட்டது. 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞாபனம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட தகவல் தொழில் நுட்ப சபைக்குச் (சின்டெக்) சொந்தமான அனைத்து அசையும் மற்றும் நிலையான ஆதனங்கள் மற்றும் சபையின் அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் கம்பனிக்கு (ICTA) ஒப்படைக்கப்பட்டிருந்தும் சபையின் அந்த தேறிய சொத்துக்களின் | ICTA அரசாங்கத்தின் முழுமையான உரிமையைக் கொண்ட ஒரு நிறுவனமாக கருத்தில் கொள்ளப்பட்டு ICTA ஒதுக்கத்தின் கீழ் CINTEC இடமிருந்து பெற்றுக்கொண்ட தேறிய சொத்துக்களாக கணக்கீடு செய்தல் மிகவும் துூர நோக்கமுள்ளதாகக் கருதப்படுகின்றது. | சரியாக கணக்குகளில் செம்மையாக்குதல் வேண்டும். |

மீதியான ரூபா 5,744,115 தொகை கம்பனியின் ஆரம்ப மூலதன உள்ளீடாக நிதி நிலைமைக் கூற்றில் தனியாக வெளிப்படுத்துவதற்குப் பதிலாக 2007 ஆம் ஆண்டின் போது இலாப நட்டக் கணக்கின் மீதிக்கு செம்மையாக்கப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட இலாபம் இப்பெறுமதியால் குறைவதற்கு தாக்கமளித்திருந்தது.

**1.5.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| **விடயம்** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி** | **துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி** | **வித்தியாசம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| கிடைக்க வேண்டிய மானியம் | 1,818,995,490 | 1,766,863,714 | 52,131,776 | மானியம் கிடைக்க வேண்டியது அமைச்சிடமிருந்தாகும். | கிடைக்க வேண்டிய மானியத்தை அமைச்சின் ஏடுகளுடன் கணக்கிணக்கம் செய்தல் வேண்டும். |

**1.5.4 ஒருங்கிணைப்புச் செய்தல்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 2022 நவம்பர் 15 ஆந் திகதி நடைபெற்ற கம்பனியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின். 242 ஆம் பிரிவின் பிரகாரம் துணைக் கம்பனியான லங்கா கவர்மன்ட் இன்போமேசன் இன்ப்ராஸ்டக்சர் (பிரைவேட்) லிமிடட் கம்பனியுடன் ஒருங்கிணைப்புச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 2024 ஏப்ரல 30 அந் திகதி வரை அச்செயற்பாடு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும் 2023 மே 23 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏழு நபர்களை உள்ளடக்கிய துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையுடனஆளணியினரை கம்பனியுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் முடிவடையும் வரை தனியாக பேணுவதற்கு மற்றும் எல்ஜீஜஜ பணிப்பாளர் சபைக்கு ஆளணியினர் சம்பளம் சம்பந்தமாக பொருத்தமான தீர்மானம் எடுப்பதற்கு காட்டப்பட்டிருந்தும் ஒருங்கிணைப்புச் செய்தல் முடிவடைவதற்கு முன்னர் கம்பனியின் ஆளணியினர் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டிருந்தனர. | LGII இனையும் ICTA இனையும் ஒருங்கிணைப்புச் செய்தல் முடிவடையும் வரை தனித்தனியாக சம்பளப் பதிவேட்டினைப் பேணுவதற்கு 2023 மே 23 ஆந் திகதிய கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட சபையின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிறோம். | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 அமைப்பு தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 4,120,754 ஆக இருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 138,071,245 ஆகும். மேலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் உரிமை மூலதனம் ரூபா 138,071,225 மறைப் மறைப்பெறுமதியினைக் கொண்டிருந்தது. | பணிக்கொடை செலவுகள் பிரதான வருமானமாக வகைப்படுத்தப்பட்டிருக்காததுடன் சொத்துக்களின் பெறுமானத் தேய்வுகள் திறைசேரியின் மானியங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. இந்த இரண்டு செலவுகளும் நிதிக் கணக்குகளில் நட்டத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளது. | ஆபத்தினை குறைத்துக் கொள்வதற்கு கம்பனி துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 23/2443/630/009 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் அமைப்பு அகவிதியின் மற்றும் 2003 இன் 27 அமைப்பு ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியை முடிவுறுத்துவதற்காக திறைசேரி செயலாளருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியை பொறுப்பேற்று நடைற்றுக்கொண்டிருக்கும் செயற்திட்டங்களை அமைச்சின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு ஒப்படைப்பதற்கும் 2023 திசெம்பர் 18 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவ்வாறு நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தும் கம்பனி செயற்பட்டு வந்திருந்தது. | ICTA இனைக் கலைப்பதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானம் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 02 இல் வெளிப்படுத்தப்பட்டது. | அமைச்ரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| கடன்கொடுத்தோர் | 2,111,459 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | இந்த 13 வழங்குனர்களின் நிலுவை மீதிகளை தீர்த்துவைப்பதற்கு அல்லது பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அனைத்து கடன் கொடுத்தோர்களடமிருந்தும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**1.6 செலுத்த வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அவசர கணனி பதிலளிப்பு மன்றத்திற்கு (இலங்கை சேர்ட்) செலுத்த வேண்டிய ரூபா 40,215,928 தொகை 2017 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சேர்ட்டிற்கு செலுத்த வேண்டியவைகள் கணக்கு தவறுகளின் காரணமாக உருவாகியிருந்தது. தொழில்நுட்ப அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் கலந்துரையாடலின் பின்னர் இச்சிக்கல் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய பணத்தை வினைத்திறனாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133(1) ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு கலண்டர் ஆண்டிற்கு ஒரு தடவை பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனி 2017 ஆம் ஆண்டிற்கு வருடாந்த பொதுக் கூட்டத்தினை கூட்டியிருக்காததுடன் 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டது. | 2019 இலிருந்து 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிப்பதற்கானம் தாமதம் வருடாநத பொதுக் கூட்டத்தினை (AGM) அழைத்தல் தாமதமடைந்தமை காரணமாக இருந்தது. | அதிகாரச் சட்டத்தின பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிறுவாக கட்டுப்பாடு தொடர்பான செயற்பாட்டு கையேடு | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | பந்தி இலக்கம் 3.2 | ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கம்பனிக்கு அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரித்த ஆளணியனர் இல்லாதுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறை (SOR) அமுல்ப்படுத்தப்படாதிருந்த போதிலும் 2020 நவம்பர் 04 ஆந் திகதி அமுலுக்கு வரும் வகையில் அமைச்சரவை அங்கீகரித்த ஒரு ஆளணி காணப்பட்டது. 2023 திசெம்பர் 04 ஆந் திகதி தொழில்நுட்ப அமைச்சினூடாக (MOT) அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் (PED) நிதி அமைச்சிற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளது. | செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் கம்பனிக்காக அங்கீகரித்த ஆளணி மற்றும் ஆட்செரப்பு நடைமுறை காணப்படுதல் வேண்டும். |
| (ii) | பந்தி இலக்கம் 3.8 | அரசாங்க தொழில் முயற்சியில் ஊழியர்களுக்கு தொடர்பாடல் வசதிகளானது காலத்துக்கு காலம் வழங்கப்பட்ட அரசாங்க சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனி சுற்றறிக்கை ஏற்பாடு இல்லாது செயற்திட்ட உத்தியோகத்தர்/ செயற்திட்ட உதவியாளர்கள் மற்றும் சாரதி பதவியணியினர்களுக்கும் தொலை பேசி படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 210,000 தொகையினை செலுத்தியிருந்தது. | ஆளணியினர் நிலைமை அல்லது தரத்திற்கு இணங்க எந்த வித்தியாசமும் இல்லாது நடமாடும் தொலைபேசி படிகள் செலுத்தப்பட்டுள்ளன.இந்த ஆண்டின் தொடக்கத்தில் வழங்கிய படிகளை வழங்காதிருத்தல் ஊழியர்களுக்கிடையே குழப்பநிலையை உருவாவதற்கு காரணமாக இகருக்கும் எனவே தற்பொழுது வழங்கப்படுகின்ற படிகளை குறைப்பதனை விட எதிர்கால சம்பள ஏற்றங்களுக்கு எதிராக இப்படியினை நீக்குவதற்கு உறுதிப்படுத்துகிறோம். | செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,342,087 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 22,763,175 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 32,105,262 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு பணிக்கொடைக்கான ஒதுக்கீடு ரூபா 11,903,300 தொகையினை ஒருங்கிணைந்த இலாப நட்ட கூற்றில் உள்ளடக்குவதற்குப் பதிலாக விபரமான வருமான கூற்றில் உள்ளடக்குதல் மற்றும் பிற்போட்ட வருமானத்தினை ரூபா 5,387,397 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ''ஈ நூல் நிலையம்'' செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக பில்எனட் மெலின்டா கேட்ஸ பவுன்டேசன் இனால் வழங்கப்பட்டிருந்த ரூபா 121,582,863 பணத்திலிருந்து அச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தாது 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஏனைய வருமானமாக கம்பனியின் வருமானத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | டீடைட யனெ ஆநடனைெய புயவநள மமன்றம் இந்த நிதியை வழங்கியது. நன்கொடையான ஆனதுடன் களணிஅமற்றும் இணைய தளத்திற்கு இலவசமாக அணுகுவதனூடாக நபர்களை தகவல்களுக்கு தொடர்புபடுத்துவதற்காக பொது நூலகத்திற்கான ஒரு செயற்திட்டத்திற்கு பணம் கிடைத்துள்ளது. | செயற்திட்டத்திற்கு கிடைக்கின்ற பணம் அதற்காககே பயன்படுத:துதல் வேண்டும். |
| (ஆ) | 30 ஊழியர்களுக்கு சம்பள ஏற்றங்களை வழங்கிய போது பணிப்பாளர் சபை வழங்கிய பிரதான தீர்மானத்திற்கு எதிராக சம்பள ஏற்றங்களை வழங்கியதன் காரணமாக அச்சம்பள திருத்தங்கள் அதிகாரமற்றது என கம்பனிக்கு 2023 செப்தெம்பர் 14 ஆந் திகதிய ஈ/112/2023/ஐசீரீஏ இலக்க சட்டமா அதிபரின் கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க கம்பனி மீளாய்வாண்டின் போது ரூபா 7,211,465 சம்பளமாக மிகையாக செலுத்தியிருந்தது. | 2024 மார்ச் மாதத்திலிருந்து சம்பள செம்மையாக்கல்களைக் கழித்ததன் பின்னர் சம்பளத்தை செலுத்தவதற்கு எங்களுக்கு நிதி கிடைத்துள்ளதனால் இந்த சம்பள செம்மையாக்கல்களை நாங்கள் குறைக்க வேண்டி ஏற்பட்டது. இக்குறைத்தல் சம்பந்தமாக ஊழிர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதுடன் தொழில் திணைக்களத்திற்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | அங்கீகரித்த சம்பள அளவுத்திட்டத்திற்கு இணங்க கொடுப்பனவு செய்தல் வேண்டும். மிகையாகச் செலுத்திய சம்பளங்கள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக நீதிமன்றத்திதை தன்னியக்கப்படுத்துதல் செயற்திட்டத்திற்காக கிடைத்த ரூபா 27,253,057 தொகை வீடியோ கருத்தரங்கு செயற்திட்டத்திற்காக கிடைத்த ரூபா 61,996,498 தொகையை மீளச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | இச்செயற்திட்டத்திற்காக கிடைத்த பணம் உரிய தரப்பினர்களுக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது. | திட்டமிட்ட செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.3 சச்ரசரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நீதிமன்றங்களை தன்னியக்கப்படுத்தும் (Court Automation) செயற்திட்டத்திற்காக நீதி சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சிடமிருந்து கிடைத்த பணத்தை மீளச் செலுத்தும் போது ரூபா | தற்பொழுது முடிவடைந்துள்ள நீதிமன்றங்களை தன்னியக்கப்படுத்துதல் செயற்திட்டத்திற்கான கம்பனியின் நிர்வாகச் செலவுகளை | வருமானங்களை அடையாளங்காண்பதன் பின்னர் கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 506,558 பணம் கம்பனியால் ஏனைய செயற்திட்டமாக (நிருவாகப் பொறுப்புக்கள்) தொடர்ந்தும் நிறுத்திவைக்கப்பட்டு கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | தீர்த்துவைப்பதற்கு கிடைத்த பணம் இலாப நட்ட கணக்கில் வருமானமாக அடையாளங்காணப்படவில்லை. |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 235 பதவியணியினர்களுக்கு போதியளவிலான ஒரு கட்டிடத்தினை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்தும் மீளாய்வாண்டில் உள்ளபடியான பதவியணியினர் 75 ஆக இருந்ததனால் 10320 சதுர அடிக்கான கட்டிட வாடகை ரூபா 21,054,840 தொகை விளைவற்றதாக செலுத்தப்பட்டிருந்ததடன் ரூபா 16,048,194 பெறுமதியான அலுவலக மனைப் பொருட்களும் குறைந்த பயனபாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | கம்பனியை முடிவுறுத்துவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின் காரணமாக தற்பொழுது ஊழயிர்களைச் சேர்த்துக்கொள்ளல் மட்டுப்படுத்தலானது இடவசதிகளைப் போல மனைப் பொருட்களும் குறைவாக பயன்படுத்துவதற்கு காரணமாக இருந்தது. | சொத்துக்களை உச்ச அளவில் வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவர் நிறுவனத்தின் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது மற்றும் உடன்படிக்கை செய்துகொள்ளப்படாதும் கம்பனியின் கோவைகளை களஞ்சியப்படுத்தும் வசதிகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,677,656 தொகையும் வாகனங்களை நிறுத்துவதற்காக தனியார் தரப்பினர்களிடமிருந்து ரூபா 96,000 மாதாந்த வாடகைக்கு ஒரு காணியை பெற்றுக்கொள்வதற்காக 2021 நவம்பர் மாதத்திலிருந்து 2023 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்காக ரூபா 2,496,000 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தது. | இப்பெறுகை கோவைகளை தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளது. இந்த வசதிகளுக்காக தேவைப்பாடுகள் உருவாகியது. முன்னைய கட்டிடத்தில் இருந்த மட்டுப்படுத்தப்பட்ட இடவசதிகளின் காரணத்தினாலாகும். விலை திருத்தங்கள் எதுவும் இல்லாத போதிலும் உடன்படிக்கை தொடர்ச்சியாக காணப்பட்டது. | அனைத்து பெறுகைகளும் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3.6 ஏனைய அமைப்புக்களுக்கு விடுக்கப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிறுவக கட்டுப்பாடு தொடர்பான செயற்பாட்டு கையேட்டின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சியின் ஒரு ஊழியர் அமைச்சிற்கு அல்லாது | அமைச்சு செயலாளரின் வேண்டுகோளின் பிரகாரம் தொழில்நுட்ப அமைச்சிற்கு விடுவிக்கவேண்டி ஏற்பட்டது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஏனைய ஒரு நிறுவனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாது விடுவிக்காதிருக்க வேண்டியதுடன் விடுவிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் எந்தப் படியும் செலுத்தாதிருக்க வேண்டிய போதிலும் கம்பனி ஒரு உத்தியோகத்தரினை அவ்வாறான அங்கீகாரம் இல்லாது தொழில்நுட்ப அமைச்சிற்கு விடுவித்திருந்ததுடன் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் போதும் சம்பளம் மற்றும் தொலைபேசி படியாக முறையே ரூபா 1,948,000 மற்றும் ரூபா 2,066,400 தொகையை செலுத்தியிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிறுவக கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் தந்திரோபாயத் திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு என்பவற்றை ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சினூடாக அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 05/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பாதீடு தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. செயல்நடவடிக்கைத் திட்டமும் தந்திரோபாயத் திட்டமும் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் உரிய ஆவணங்களை இலகுவாக தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளது. | வழிகாட்டிக் கோவைக்கு இணங்க தந்திரோபாயத் திட்டத்தையும் செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் தயாரித்தல் வேண்டும். |